**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் - 02 (அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் எரிசக்தி சேமிப்பு செயற்திட்டம்) - 2023**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 (அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் எரிசக்தி சேமிப்பு செயற்திட்டம்) இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஏஜென்ஸ் பிரான்சைஸ் டி டெவலொப்மென்ட்டிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008-01 பி ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2 (ஏ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பழுதடைந்த குழாய் வலையமைப்பு மற்றும் உபகரணங்களை மேம்படுத்தி மாற்றியமைப்பதன் மூலம் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு நீர் வழங்கல் முறைமையின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதே இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஏஜென்ஸ் பிரான்சைஸ் டி டெவலொப்மென்டால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 293 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 1 இன் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.36 மில்லியன் பெறுமதியான கணனிகள், அலுவலக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் மொத்தத் தொகை, PPE ஆகக் காட்டப்படுவதற்குப் பதிலாக, நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 3.36 | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் PPE இன் கீழ் ரூபா 3.36 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதி பதிவு செய்யப்படும். | சொத்துக்கள் சரியான வகையின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டம் 2014 செப்தெம்பர் 29 இல் அதனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், பட்டியலிடப்பட்ட செயற்திட்ட காலப்பகுதியினுள் இலக்கை அடைந்துகொள்ளத் தவறியதன் காரணமாக, செயற்திட்டத்தின் காலப்பகுதி 03 முறை 2024 யூன் 30 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கிய திகதியிலிருந்து 09 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் கடந்த பின்னரும் முறையே 81 சதவீதம் மற்றும் 70.75 சதவீதமாக இருந்தது, எனினும், மீளாய்வாண்டில் இச் செயற்திட்டம் 10.87 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்துள்ளதுடன் செயற்திட்டத்தின் கூறுகள் வாரியான முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

| இல. | நடவடிக்கை | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க் கப்பட்ட இலக்குகள் (%) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட இலக்குகள் (%) | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கொத்தடுவ 15000 m3 நீர்த்தேக்கம், மொரகஸ்முல்லவில் விநியோகத்துடன் கூடிய பூஸ்டர் பம்பு நிலையம் மற்றும் 5 கிமீ, 1200 மிமீ DI குழாய்கள் இடுதல் ஆகியவற்றின் நிர்மாணம் | 100 | 86.04 | ஒப்பந்த காலத்தை நீடிக்கும் சாத்தியம் மற்றும் பட்டியலிட்டவாறு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதன் ஆபத்து. | ஆரம்ப ஒப்பந்தம் பரஸ்பரம் முடிவுறுத்தப்பட்டதால் ஒப்பந்தம் தாமதமாகியதுடன் 2வது குறைந்த ஒப்பந்ததாரருக்கு மீண்டும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | செயற்திட்டத்தை தொடங்குவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வை மேற்கொள்ளாதமைக்கும், சுகாதார அமைச்சிடம் முன் அனுமதி பெறப்படாதமைக்கும் முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | அம்பத்தலே உற்பத்தி வசதிகளின் நம்பகத்தன்மை | 82.90 | 65.03 | உரிய திகதிக்கு முன்னர் செயற்திட்டத்தை பூர்த்தி | பெறுகை தாமதம், வடிவமைப்பு மாற்றம், கோவிட் 19 பாதிப்பு, நிதி | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு மிகுதிப் பணிகளை விரைவாக பூர்த்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| மேம்பாடு மற்றும் எரிசக்தி சேமிப்பு, பொருத்தமான திறன்களைக் கொண்ட திறமையான பம்புகளை நிறுவுவதன் மூலம் எரிசக்தியைச் சேமிப்பது, குறைக்கப்பட்ட உராய்வு மற்றும் ஏனைய உற்பத்தி வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் பரிமாற்ற இழப்புக்களைக் குறைத்தல். | | செய்வதற்கான ஆபத்து. | நெருக்கடி, பொருள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் ஒப்பந்தம் தாமதமாகியது. | செய்வதற்கு சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் 36 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு 2015 திசெம்பர் 01 இல் தனியார் ஆலோசனை சேவை கம்பனியொன்றிற்கு ரூபா 461 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டது. எனினும், ICB 05 மற்றும் ICB 03 இன் ஆலோசனை ஒப்பந்தம் பூர்த்தியடைந்திருக்கவில்லை. மேலும் செயற்திட்ட காலப்பகுதி முழுவதும் நீண்டகால தாமதங்கள், வினைத்திறனின்மை மற்றும் ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக, ஆலோசனையின் காலப்பகுதி 2024 யூன் 30 வரை 6 தடவைகள் நீடிக்கப்பட வேண்டியிருந்தது, மேலும் 6வது நீடிப்பின் போது ஆலோசனை ஒப்பந்தத்தின் உள்ளீடுகளுக்காக ரூபா 21 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனவே, செயற்திட்டத்தின் ஆலோசனைச் சேவைக்கான ஒட்டுமொத்த கிரயம் மதிப்பிடப்பட்ட ஆலோசனைச் செலவை விட ரூபா 159 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் கணக்காய்வு திகதியான 2024 யூலை 10 வரையிலும் ஆலோசனை ஒப்பந்தம் இன்னும் நடந்துகொண்டிருந்தது. | உட்பிரிவு 4.1.1 மற்றும் 4.1.2 இல் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்த பொதி தாமதங்கள், முக்கிய நிபுணர்களுக்கான கொடுப்பனவுகளைத் தவிர்ப்பதற்காக ஆலோசகர் முக்கிய நிபுணர்களைத் திரட்டுவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றன. எனினும், ஒப்பந்தப் பொதிகளின் முன்னேற்றத்துடன், முன்னர் முக்கிய நிபுணர்களை அணிதிரட்டாத சேமிப்பில் இருந்து ஆலோசனை சேவை நீடிக்கப்பட்டிருந்தது. ICB 03 மற்றும் ICB 05 இன்னும் தொடர்வதால், ஆலோசனை சேவையின் காலம் நீடிக்கப்பட வேண்டியுள்ளது. 2024 யூலை 25 இல் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதால், முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் மேலும் இழப்புகளைக் குறைப்பதற்கும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை ஆலோசகர் நெருக்கமாகக் கண்காணிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ICB 04 ஒப்பந்தம் நடவடிக்கைகளின் தொடக்கத் திகதியான 2016 யூலை 01 முதல் 672 நாட்களுக்கு வழங்கப்பட்டது, பின்னர் அது 2024 யூன் 30 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஒப்பந்ததாரர் 903 நாட்களுக்குப் பதிலாக 2,428 நாட்களை 2024 யூன் 30 அளவில் எடுத்துள்ளார் (இடைநீக்க காலத்தைத் தவிர்த்து). செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றத்தில் 99 சதவீதம் மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டிருந்தது. எனினும், எல்லி ஹவுஸ் பம்பி நிலையம் இன்னும் நிறுவல் கட்டத்தில் இருப்பதாலும் கிருமி நீக்கம் செய்வதற்கு தேவையான அளவு தண்ணீரைப் பெறுவதில் சிக்கல் உள்ளதாலும் 2024 யூலை 10 வரையிலும் குழாய் சுத்திகரிப்பு மற்றும் கிருமி நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எல்லி ஹவுஸ் பம்பி நிலைய நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதாலும், கிருமிநீக்கத்திற்கு தேவையான அளவு தண்ணீரைப் பெறுவதில் உள்ள சிரமங்களாலும் கிருமி நீக்கம் மற்றும் சுத்தம் செய்யும் பணி தாமதமாகியது. இந்த சிக்கலை தீர்ப்பதற்கு, புதிதாக அமைக்கப்பட்ட குழாய் வரிசைகள் இணைக்கப்பட்டுள்ளது, மேலும் எல்லி ஹவுஸ் பம்பி நிலைய நிறுவல் பணிகள் ஆகஸ்ட் நடுப்பகுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவல் பணி முடிவடைந்ததும், மேலதிக தாமதமின்றி கிருமிநீக்க செயன்முறையை முன்னெடுக்க முடியும். | பம்பி நிறுவல் பணி மற்றும் மேற்கொள்ளப்படும் குழாய் வரிசையை மேலதிக தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கொத்தடுவ 15,000 m3 நீர்த்தேக்கங்கள் மற்றும் பூஸ்டர் பம்பி நிலையம் மற்றும் 05 கிமீ DI குழாய்களை (ICB 03) இடுதல் ஆகியவற்றின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2023 யூன் 06 அளவில் பூர்த்தி செய்யப்படவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர், அது 2024 மே 07 வரை நான்கு தடவைகள் நீட்டிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 86 சதவீதம் மற்றும் 83 சதவீதமாக இருந்தது, மேலும் இது 2024 யூன் 30 வரை முறையே 93 சதவீதம் மற்றும் 85 சதவீதமாக இருந்தது. மேலும் ICB 3 ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதில் நீண்டகால தாமதத்திற்கு நேரடியாக தாக்கமளித்திருந்ததென செயற்திட்டத்தின் ஆலோசகர் அவரது முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளார். | தாமதங்களுக்கு பங்களிக்கும் முதன்மை காரணிகள் உருப்படி 4.1.1 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மற்றும் பலவீனமான மண் நிலைமைகள், அதிக எண்ணிக்கையிலான நிலத்தடி பயன்பாடுகள் மற்றும் வடிவமைப்பு மாற்றங்களின் விளைவாக மேலதிக வேலை ஆகியவை சமீபத்திய கால நீடிப்பு (EOT) கோரிக்கைக்கு தாக்கமளிக்கும் குறிப்பிடத்தக்க சிக்கல்களாகும். | திட்டமிட்டவாறு ICB 03 ஒப்பந்தப் பொதியை மேலதிக தாமதமின்றியும் நாட்டிற்கு இழப்புக்கள் ஏற்படாமலும் பூர்த்தி செய்வதற்கு பரிகார நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தகுந்த திறன் (IC 05) கொண்ட வினைத்திறனான பம்பிகளை நிறுவுவதன் மூலம் எரிசக்தியை சேமிப்பதற்காக அம்பத்தலே உற்பத்தி வசதிகளின் நம்பகத்தன்மை மேம்பாடு மற்றும் எரிசக்தி சேமிப்புக்கான ஒப்பந்தம் 2020 திசெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. பின்னர், ஒப்பந்த காலப்பகுதி 2024 ஏப்ரல் 30 வரை நான்கு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் முழு செயற்திட்ட | இந்த தாமதங்கள் காரணமாக ஒப்பந்ததாரர் மேலதிக கால நீடிப்பை கோரியுள்ளார். செயற்திட்ட கால நீடிப்புக்கான அமைச்சரவை அங்கீகாரம் 2024 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட பட்டியலை கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்ட பதவியணியினர் ஒப்பந்ததாரரின் முன்னேற்றத்தை | செயற்திட்ட முகாமைத்துவமானது, செயற்திட்டத்தின் வினைத்தறனின்மை மற்றும் தேவையற்ற தாமதங்களை தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளிலிருந்தும் 45.60 சதவீத நிறையை பிரதிநிதித்துவப்படுத்துகிற போதிலும் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 65 சதவீதம் மற்றும் 47 சதவீதமாக இருந்ததுடன் இது 2024 யூன் 30 இல் உள்ளவாறு முறையே 75 சதவீதம் மற்றும் 48 சதவீதமாக இருந்தது. | தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். | |

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) தரை நீர்த்தேக்கங்களை நிர்மாணிப்பதன் மூலம் அதிக எரிசக்தி வினைத்திறன்களை அடைந்துகொள்வதையும் உராய்வினால் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கு பெரிய விட்டம் கொண்ட பழுதடைந்த குழாய் வலையமைப்பை மாற்றியமைப்பதையும் இலக்காகக் கொண்டு பழைய மற்றும் பயனற்ற எரிசக்தி உற்பத்தித்திறன் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலான பம்பிகளை மாற்றியமைப்பதற்கு NWSDB முடிவு செய்திருந்தது, மேற்படி நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு 17 புதிய பம்பிகளை மாற்றியமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், மேலே உள்ள 17 இல் 13 கொள்வனவு செய்யப்பட்டு 12 நிறுவப்பட்டது. மேலும், கணக்காய்வு திகதியான 2024 யூலை 10 வரையிலும் கொத்தடுவ உயர் லிப்ட் பம்பி இல்லத்திற்கான 4 எண்ணிக்கையிலான பம்பிகளின் பெறுகை இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 16 இல் 1 ஓட்ட மானி, 11 இல் 3 சர்ஜ் வெசல்ஸ் (surge vessels) மற்றும் SCADA முறைமை மாத்திரமே அந்த திகதியளவில் நிறுவப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தில் ஆரம்ப கால தாமதங்கள் காணி, பரஸ்பர முடிவுறுத்தல்கள் மற்றும் நிதி சிக்கல்கள் ஆகியவற்றால் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து, 2019 இன் பிற்பகுதியிலிருந்து 2021 இன் இறுதி வரை ஏற்பட்ட தொற்றுநோய் நெருக்கடி, நாட்டின் பொருளாதார வீழ்ச்சியுடன் இணைந்து, ஒப்பந்ததாரரை அங்கீகரிக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கடைப்பிடிப்பதைத் தடுத்தது.<br><br>குறுக்கீடுகளை முகாமை செய்வதில் உள்ள சவால்கள் காரணமாக பம்பி நிறுவல் பணி தாமதத்தை எதிர்கொண்டது. அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருவதாலும் காலாவதியானதாலும் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. இந்த சிக்கல்கள் ஒப்பந்ததாரர் மற்றும் தொழில்தருநரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். | பொருத்தமான ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்யத் தவறிய செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு செய்யாததற்கான காரணத்தைக் கண்டறிவதற்கு விசாரணை நடாத்தப்பட வேண்டும். நன்கு கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலைகளுக்கு முகாமைத்துவத்திற்கு மன்னிப்புகள் இல்லை. எனவே 2024 ஆம் ஆண்டு முடிவதற்குள் முழு செயற்திட்டத்தையும் பூர்த்தி செய்வதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2016 ஆம் ஆண்டு முதல் செயற்திட்ட செயற்பாடுகள் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 முதல் பூர்த்திசெய்தல் திகதியாக இருந்த போதிலும், மூன்று தடவைகள் காலநீடிப்பு வழங்கப்பட்ட போதிலும் எந்த ஒரு முக்கிய ஒப்பந்தமும் 2024 யூலை 31 வரையிலும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br>எனினும் செயற்திட்டம் PMU ஆல் நிர்வாகம், ஆலோசனை, பராமரிப்பு போன்றவற்றில் பெரும் தொகையைச் செலவிட்டு இழுத்தடிக்கப்படுகிறது. மேலும் கடன் தவணை (234 மில்லியன்), கடப்பாட்டுக் கட்டணங்கள் (390 மில்லியன்), வட்டி (621 மில்லியன்) போன்ற அரசாங்க செலவினங்கள் பொருளாதாரத்திற்கு எந்த நலனையும் அளிக்காமல் ஏற்பட்டதுடன் மறுபுறம் அதிக எரிசக்தி நுகர்வைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைந்துகொள்ளாமல், நீர் வழங்கலுக்கான NWSDBs இன் கிரயம் அதிகரித்துள்ளது. மேலும், ஒப்பந்ததாரர்களின் மோசமான திட்டமிடல், மோசமான செயலாற்றல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவத்தின் மோசமான ஒப்பந்த மேற்பார்வை ஆகியவை செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதை மோசமாகப் பாதித்திருந்தன. | செயற்திட்ட தாமதத்திற்குப் பங்களித்திருந்த பிரிவுகள் 4.1.1 மற்றும் 4.1.2 இல் சவால்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள போதிலும் செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) வேண்டுமென்றே எந்த தாமதத்தையும் ஏற்படுத்தவில்லை. மேலும், தாமதத்திற்கு ஒப்பந்ததாரரின் மோசமான திட்டமிடல், செயலாற்றல் அல்லது மேற்பார்வை காரணமாக இருக்க முடியாது.<br>எனினும் செயற்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் குறிப்பிடத்தக்க நேர்மறையான விளைவுகளை விளைவித்துள்ளது. அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அவதானிக்கப்பட்ட எரிசக்தி சேமிப்புத் தொகை மாதமொன்றிற்கு ரூபா 18.5 மில்லியன், மொத்த மின்சார கிரயத்தில் ஏறத்தாழ 11% ஆகும். இந்தச் சேமிப்புக்கள் தொடரும் என்றும், செயற்திட்டம் பூர்த்தியடைந்தவுடன் மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. | எதிர்பாராத சூழ்நிலைகளை முகாமை செய்து நாட்டிற்கு மேலதிக நிதிச் சுமையைத் தவிர்ப்பதற்கு பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ICB 05 இன் பிரதான ஒப்பந்ததாரர் 2023 மே 24 ஆம் திகதிய இசட்எச்எஸ்இசட்ஜேஎச்/2857/05/23 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஐ.அ.டொலர் 5,691,179.76 தொகையான விலை உயர்வு உரிமைக்கோரிக்கையை கோரியுள்ளார். எனினும் இது ஒரு வடிவமைப்பு மற்றும் கட்டுமான தன்மையான ஒப்பந்தம் என்பதாலும் உடன்படிக்கையின் பிரகாரம் விலை ஏற்றத்தை செலுத்துவதற்கு வேறு எந்த நிதியேற்பாடுகளும் காணப்படவில்லை என்பதாலும் | ICB 05 ஒப்பந்ததாரரிடம் இருந்து விலை உயர்வுக்கான உரிமைகோரிக்கையைப் பெற்றுள்ளோம். ஒப்பந்ததாரர் தங்கள் பணிக்குத் தேவையான உள்ளீடுகளின் கிரயத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக சீராக்கமொன்றை கோரியுள்ளார். இந்த விலை உயர்வுகள் எதிர்பாராதவை என்றும் அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்றும் ஒப்பந்ததாரர் வாதிடுகிறார், எனவே உடன்படிக்கையில் கைச்சாத்திடும் | ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்கவும், இந்த விடயத்தில் விடய அறிவைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு குழுவின் பரிந்துரையின் பிரகாரமும் ஒப்பந்ததாரரின் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்தகைய விலை அதிகரிப்பு உரிமைக்கோரிக்கையை செலுத்துவதற்கு முகாமைத்துவம் பொறுப்பானதல்ல என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | போது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. உரிமைக்கோரிக்கை தற்போது மதிப்பீட்டில் உள்ளது. எடுக்கப்பட்ட எந்த முடிவும் நியாயமானதாகவும், உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு இணங்கவும் இருக்கும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய அனைத்து விபரங்களையும் பரிசீலனைகளையும் நாங்கள் கவனமாக மதிப்பாய்வு செய்கிறோம். மதிப்பீட்டு செயன்முறை பூர்த்தியடைந்ததும் மேலும் புதுப்பிப்புக்களை வழங்குவோம். | |
| (இ) | ஒரு வருட காலத்திற்குள் 06 பதவியணியினர் குடியிருப்பு அலகுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 129 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தமொன்று 2021 ஆகஸ்ட் 10 இல் தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கு 2023 செப்தெம்பர் வரை நான்கு கால நீடிப்புக்களை வழங்கியிருந்ததுடன் சில வேலைகள் எஞ்சியிருந்த நிலையில் பரஸ்பர உடன்படிக்கையின் பேரில் சபை ஒப்பந்தத்தை நிறுத்தியிருந்ததுடன் ரூபா 44.12 மில்லியன் விலை அதிகரிப்பு கிரயம் உட்பட ரூபா 131.51 மில்லியனை செலுத்தியிருந்தது. மேலும், 2024 யூலை 10 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு கள விஜயத்தின் போது, முழு ஓடு (tile) வேலைகளும், பல முடித்தல் வேலைகளும் இன்னும் தளத்தில் பூர்த்தி செய்யப்படுவதற்கு உள்ளன. | ஆரம்ப ஒப்பந்தத்தில், விலை ஏற்றம் கணக்கீடு செய்யப்படவில்லை. எனினும், ஒப்பந்தத் திருத்தம் -1 கைச்சாத்தானதை தொடர்ந்து, விலை உயர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும், ஒப்பந்த அளவிடைப் பட்டியல்களில் (BOQ) தற்காலிகத் (Provisional) தொகை சேர்க்கப்படவில்லை. | விலைவாசி உயர்வு மற்றும் உடன்படிக்கைக்கான திருத்தம் ஆகியவை நியாயமான அடிப்படையில் செய்யப்பட்டதா என விசாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட 70 சதவீதத்தை குறிக்கும் ரூபா 9,100 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், ஒதுக்கீட்டில் 60 சதவீதத்தை குறிக்கும் ரூபா 9,942 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42.53 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்ட செயற்பாடுகள் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து 8 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் கடந்த பின்னர் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | பிரிவுகள் 4.1.1 மற்றும் 4.1.2 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள காரணங்களால், திட்டமிடப்பட்ட எதிர்வுகூறலின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களுக்கு செயற்திட்டத்தால் நிதிகளை வழங்க முடியவில்லை. இதன் விளைவாக, கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க அரசாங்கம் கடப்பாட்டுக் கட்டணங்களை செலுத்தியது. எனினும் ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்கும் நிதியேற்பாடுகளுக்குள் இந்த மேலதிக வேலையின் தாக்கத்தை குறைப்பதற்கு | எதிர்பாராத சூழ்நிலைகளை முகாமை செய்வதற்கும், செயற்திட்டத்தின் முக்கிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பணிகளை விரைவுபடுத்துவதற்கும், தேவையற்ற செலவைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 390.4 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.2 மில்லியன் கூட்டுமொத்தமான கடப்பாட்டுக் கட்டணங்கள் 2023 திசெம்பர் 31 வரை வழங்கப்படாத மீதிக்காக அரசாங்கத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டம் எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளது. | |

**3.4 முறைமை மற்றும் கட்டுப்பாடு**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | NWSDB இன் உள்ளக கணக்காய்வு பிரிவு 2023 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றின் கணக்காய்வை 2024 யூலை 31 வரை நடாத்தியிருக்கவில்லை. | செயலாற்றல் கணக்காய்வு மற்றும் நிதி கணக்காய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 யூன் 30 ஆம் திகதியளவில் செயற்திட்டத்தின் பதவியணியினரை 22 வரை குறைப்பதற்கு தேசிய செயற்பாட்டு அறையின் (NOR) குழு அறிவுறுத்தியிருந்த போதிலும் மேற்படி முடிவைக் கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 29 அதிகாரிகள் செயற்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | பயனுள்ள செயற்திட்ட மேற்பார்வையை உறுதிப்படுத்துவதற்கு அதிக எண்ணிக்கையிலான பதவியணியினரை தக்கவைத்துக்கொள்வது அவசியமாகும். இதையடுத்து, இந்த குறைப்பு படிப்படியாக அமுல்படுத்தப்படும். 2024 யூலை 31 இல் உள்ளவாறு பதவியணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 27 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது, ஆனால், 20 எண்ணிக்கையிலான பதவியணி உறுப்பினர்கள் மாத்திரம் பணி நிலையம் AWSSIESP இல் உள்ளதுடன் ஏனைய 7 பதவியணி உறுப்பினர்கள் வெவ்வேறு NWSDB பணி நிலையங்களில் வேலை செய்கிறார்கள். குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பதவியணியினருடன் செயற்திட்டம் தொடர்ந்து இயங்குகிறது, மேலும் இந்த பதவியணி உறுப்பினர்களுக்கான சம்பளம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் (NWSDB) ஈடுசெய்யப்படுகிறது. | முகாமைத்துவம் NOR குழுவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுடன் இணங்க வேண்டும். |